DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 9/2017

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கிருஷ்ணகுமார் |
| Father / Husband Name | பத்மநாபன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.03.2026

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிரி என்னிடம் பணம் கேட்டார் கொடுத்தேன், அதை திருப்பி தருவதற்காக காசோலையை கொடுத்தார். காசோலை எதிரியின் வங்கி கணக்கில் பணம் இல்லை என திரும்பி வந்துவிட்டது, அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எதிரி என்னிடம் எவ்வளவு ரூபாய் பணம் கேட்டார் என்றால் ரூபாய் 30 லட்சம் கேட்டார். 09.09.2016 ம் தேதி எதிரி வீட்டிற்கு செல்லும் வழியில் கேட்டார். அதே தேதியில் என் வீட்டிற்கும் வந்து பணம் கேட்டார். என் வீட்டு முகவரி 68, கூடலூர் கிராமம், மொறப்பாக்கம் அஞ்சல், மதுராந்தகம் தாலுக்காவில் உள்ளது. பணம் கேட்கும்போது எதிரி மட்டும் தான் வந்தார், அவருடன் வேறு யாரும் வரவில்லை. அவர் வரும்போது என் வீட்டில் நான் மட்டும் தான் இருந்தேன்.

2. என்னிடம் பணம் கேட்கும்போது நான் என்ன சொன்னேன் என்றால் பணம் தருவதாக சொன்னேன். 09.09.2016 அன்று மாலை 3.30 முதல் 4.00 மணியளவில் ரூபாய். 30 லட்சம் பணம் கொடுத்தேன். என்ன காரணத்திற்காக எதிரி பணம் கேட்டார் என்றால் அவரது சொந்த தேவைக்காக கேட்டார். நான் பணத்தை கொண்டுவந்து எதிரியின் வீட்டின் அருகே உள்ள கார் ஷெட்–ல் வைத்து கொடுத்தேன். நான் பணத்தை கொடுக்கும்போது அங்கு வேறு யாரும் இல்லை. நான் எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் 30 லட்சம் கொடுத்தேன். பணத்தை கொடுக்கும்போது தான் எதிரி காசோலையை கொடுத்தார். நான் ரூபாய் 30 லட்சம் பணத்தை வங்கியில் இருந்து கொண்டுவந்தேனா என்றால் இல்லை, நான் என்னுடைய நிலம் விற்பனை செய்த பணம் கையில் வைத்திருந்தேன், அந்த பணத்தை தான் கொடுத்தேன்.

3. நான் ரூபாய் 30 லட்சம் பணத்தை எதிரியின் வீட்டின் அருகே உள்ள கார் ஷெட்–ல் வைத்து கொடுத்தேன் என என் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி

மேற்படி 30 லட்சம் ரூபாய் பணத்தை எவ்வளவு நாட்களில் திருப்பி தருவதாக சொன்னார் என்றால் அதிகபட்சமாக 1 மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார். இந்த விவரத்தை நான் என் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி 09.09.2016 அன்று பணம் கேட்டார் என்றும், அதே தேதியில் நான் 30 லட்சம் கொடுத்தேன் என்றும் நான் என் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4. எதிரியிடம் ரூபாய் 30 லட்சத்தை கொடுத்ததற்கு வேறு ஏதாவது ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை, காசோலை மட்டும் தான் வாங்கினேன். எதிரி எனக்கு 2011–12 முதல் பழக்கம். எதிரி எனக்கு நேரடியாக தான் பழக்கம். எதிரியிடம் எங்கெங்கு வைத்து எத்தனை முறை பணம் கேட்டேன் என்றால் அவரது வீட்டிற்கு சென்றும், வழியிலும் சுமார் 7–8 முறை பணம் கேட்டேன். இந்த விவரத்தை நான் என் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு கொடுத்த மொத்த பணமும் 500 ரூபாய் நோட்டுக்கள் தான். நான் எதிரியிடம் மொத்தம் 60 கட்டு பணம் கொடுத்தேன். இந்த விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5. எதிரி எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் 2 காசோலை கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை எதிரி கொடுத்த காசோலை தான். வழக்கு காசோலையை யார் நிரப்பியது என்றால் எதிரி தான் நிரப்பினார். என்னுடைய கையெழுத்தையும், எதிரியின் கையெழுத்தையும் தடய அறிவியல் துறைக்கு அனுப்பினால் அந்த காசோலையை யார் நிரப்பினார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் 21.11.2016 அன்று என் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அறிவிப்பு கொடுத்தேன். நான் அனுப்பிய அறிவிப்பில் 21.11.2016 என்றும் 22.11.2016 என்றும் இரண்டு தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் வழக்கறிஞர் 21.11.2016 அன்று தான் அறிவிப்பை அனுப்பினார்.

6. இந்த வழக்கின் காசோலை என் என்ன என்று தெரியுமா என்றால் 019311 மற்றும் 312 ஆகும். மேற்படி காசோலையை நான் மதுராந்தகம் ஆக்ஸிஸ் வங்கியில் செலுத்தினேன். எண் 312 காசோலையை 21.11.2016 அன்று வங்கியில் செலுத்தினேன். நான் வருமான வரி ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எதிரிக்கு கொடுத்த ரூபாய் 30 லட்சத்தை என்னுடைய வருமானவரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் நிலம் விற்பனை செய்தது மற்றும் வரவு செலவு கணக்கை ஆடிட்டரிடம் சொன்னேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகாவது ஆடிட்டரிடம் 30 லட்சம் எதிரிக்கு கொடுத்தது பற்றி வருமான வரியில் சொல்லப்பட்டுள்ளதா என்பதை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் நான் ஒவ்வொரு வருடமும் எவ்வளவு வாங்கினேன் என என் ஆடிட்டரிடம் சொன்னேன். 2016 ம் ஆண்டுக்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்தால் நான் எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் தெரியவரும் என்றால் என் கையில் இருந்த பணத்தை பற்றி அதில் குறிப்பிட்டிருப்பேன்.

7. எனக்கு வருடம் எவ்வளவு ரூபாய் வருமானம் வரும் என்று சொல்லமுடியுமா என்றால் அது வருடம் வருடம் வேறுபடும். எதிரி தவிர வேறு யாருக்காகவது பணம் கொடுத்துள்ளேனா, அது தொடர்பாக வழக்கு ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு நான் கைமாத்து கடனாக கொடுத்தேனா அல்லது வட்டிக்காக

கொடுத்தேனா என்றால் வட்டிக்கு தான் கொடுத்தேன். மேற்படி தொகை நான் மாதம் 2 சதவீதம் வட்டிக்கு கொடுத்தேன். இந்த விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. எதிரியிடம் இருந்து எத்தனை மாதம் வட்டி வாங்கினேன் என்றால் வட்டி வாங்கவில்லை. எதிரி காசோலை கொடுத்ததில் இருந்து நான் 50 நாட்கள் கழித்து தான் நான் வழக்கு தொடர்ந்தேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்தது சம்மந்தமாக வரவு செலவு கணக்கு ஏதாவது எழுதிவைத்துள்ளேனா என்றால் என்னுடைய வீட்டில் சின்ன நோட்டில் எழுதிவைப்பேன்.

8. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததை எழுதிவைத்துள்ளேனா என்றால் எழுதிவைத்துள்ளேன். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஞாபகமறதிக்காக தான் அதை எழுதிவைத்துள்ளேன். பொதுவாக ரூபாய் 50,000/-க்கு மேல் பணப்பரிவர்த்தனை செய்யவேண்டும் என்றால் பான் கார்ட்டு அடிப்படையில் தான் செய்யமுடியும் என்றால் அந்த விதி தற்போது தான் வந்தது. நான் எதிரியின் வீட்டிற்கு சென்று கடனை திருப்பி தர கேட்டேனா என்றால் கேட்டுள்ளேன். நான் மட்டும் தான் சென்றுள்ளேன். எத்தனை முறை சென்று கேட்டுள்ளேன் என்றால் சுமார் 7-8 முறை சென்று கேட்டுள்ளேன். எத்தெந்த தேதியில் கேட்டேன் என்றால் தேதி ஞாபகமில்லை. எதிரி 2016 ல் கூலி வேலை செய்தார் என்றால் இல்லை, அவர் ஒரு காம்ப்ளக்ஸ் வைத்திருந்தார், ஒரு ஆடி கார் வைத்திருந்தார். வங்கியில் கடன் வாங்கி கஷ்டமாகிவிட்டார்.

9. எதிரியை தவிர அவரது குடும்பத்தில் வேறு யாராவது கடன் வாங்கியுள்ளாரா என்றால் அவரது தந்தை 2019 ல் நிலத்தை அடமானம் வைத்து ரூபாய் 6 லட்சம் கடன் வாங்கியுள்ளார். எதிரியின் தந்தை யார் மூலம் பழக்கம் என்றால் போக வர தான் பழக்கம். 2016 ல் எதிரிக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் 2019 ல் எதிரியின் தந்தைக்கு எதன் அடிப்படையில் கடன் கொடுத்தேன் என்றால் அவர் நெல் வியாபாரம் செய்வார் அதனால் அவருக்கு நிலத்தை அடமானம் பெற்று கடன் கொடுத்தேன். எதிரியின் தந்தைக்கு வட்டிக்கு தான் கொடுத்தேன். மொறப்பாக்கத்தை சேர்ந்த கண்ணன், த/பெ.அண்ணாமலை என்பவரின் மனைவி விஜயலட்சுமி என்பவரை தெரியுமா என்றால் தெரியும்.

10. அண்ணாமலை என்பவர் மதுராந்தகத்தில் அருணாட்சலம் பைனான்ஸ் நடத்திவரும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. விஜயலட்சுமி என்பவர் மதுராந்தகத்தில் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி என்னிடம் எந்த காலத்திலும் கடனாக எந்த தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி அருணாட்சம் பைனாஸ்லில் ரூபாய் 5 லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றாலும், அந்த கடனை எதிரி கொடுத்து முடித்துவிட்டார் என்றாலும், அந்த கடனுக்காக கொடுத்த காசோலையை நானும் கண்ணனும் கூட்டு சேர்ந்து மோசடியாக இந்த வழக்கை தொடர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல.

11. கண்ணனிடம் எதிரி பணத்தை திருப்பி கொடுத்துவிட்டு அவர் கொடுத்த காசோலைகளை கேட்டபோது கண்ணன் அந்த காசோலைகள் அலுவலகத்தில் தொலைந்துவிட்டது அதை தேடி தருவதாக சொன்னார் என்றாலும், பின்னர் அந்த

காசோலைகளை நானும் கண்ணனும் சேர்ந்து பூர்த்தி செய்து இந்த வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றாலும், ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. கண்ணனையும் அவரது மனைவியையும் இந்த வழக்கில் விசாரணை செய்தால் இந்த வழக்கின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எதிரி கூலி வேலை செய்துவந்தார் என்றாலும், அந்த காலக்கட்டத்தில் 30 லட்சம் தேவை எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.